**C.C No 254/2013**
**Date 26.10.2022**
**PW : 3**
**பெயர் - திரு. நடராஜன், த/பெ.**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் தலையாரி கொம்பையா மூலம் மாலை 05.30 மணியளவில் பெருமாள்நகருக்கு வரசொல்லி தகவல் தெரிவித்தார். மேற்படி தகவலானது சுமார் மாலை 04.45 மணிக்கு தலையாரி கொம்பையா மூலம் எனக்கு கிடைத்தது. நானும், கொம்பையாவும் தான் சென்றோம் போலிசார் அழைத்து செல்லவில்லை. பெருமாள் நகருக்கு நாங்கள் செல்லும் போது போலிசார் சுமார் 3 நபர்கள் இருந்தார்கள். அங்கு இருந்த போலிசார்கள் யாரென்று இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது மற்றும் அவர்களின் பதவிகளை கவனிக்கவில்லை.

மேற்படி போலிசார் பெருமாள்நகரில் எந்தவாகனத்திலும் வரவில்லை தனியாக நின்று கொண்டிருந்தார்கள். எங்கள் அலுவலகத்திற்கும் பெருமாள்நகருக்கும் இடையே சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். நாங்கள் சென்ற இடம் ஒரு கடைகள், பேருந்து நிறுத்தம், வீடுகள் உள்ள பகுதி என்பதால் பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். நாங்கள் சென்ற நேரத்திலும் பொதுமக்கள் நடமமாட்டம் அதிகமாக இருந்தது.

போலிசார் கைபற்றிய செல்போன் மற்றும் சிம்கார்டு நிறம் எனக்கு தெரியாது. நான் கிராம நிர்வாக அதிகாரி என்பதால் பணிசம்பந்தமாக போலிசாரிடம் அடிக்கடி பணிசம்மந்தமாக பரீட்சையம் உள்ளது. கிராம நிர்வாக அலுவலர்கள் பணிநிமித்தமாக செல்லும் இடங்களுக்கு குறிப்பு எடுக்க வேண்டும் என்றால் சரிதான் ஆனால் நான் குறிப்பு எதுவும் செய்யவில்லை. பெருமாள் நகருக்கு நான் செல்லவில்லை என்றும் அப்படி சென்றிருந்தால் குறிப்பு எழுதியிருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல.

ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி எவ்வளவு நேரம் அளித்தார் என்றால் நான் போகும் போது எதிரியிடம் போலிசார் விசாரணை செய்து எழுதிகொண்டிருந்தார்கள் நான் சென்றவுடன் கையெழுத்து மட்டும் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றரை பக்கம் மட்டும் தான் எழுதப்பட்டிருந்தது. போலிசார் கொடுத்து அனுப்பிய பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றும் நான் சொல்வது போல் என் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த வழக்கு சொத்தையும் கைபற்றவல்லை என்றால் சரியல்ல. நான் அரசு அதிகாரி என்பதால் போலிசார் கேட்டு கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**